பொருள் எண்.1

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் வினியோக பணிகளுக்கு தேவையான 4 பணியாளர்களை 89 நாட்களுக்கு (பிப்ரவரி 2017 முதல் ஏப்ரல் 2017 வரை) பணிக்கு அமர்த்துவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1,20,000/–க்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் (ம) வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்: 1590 நாள்: 31.01.2017–ன் மூலம் மன்றம் அங்கீகரித்துள்ளது.

அதன் அடிப்படையில் 08.02.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.சுகுமாரன்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | திரு.C.தேவராஜ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட<br>0.61% அதிகம். |

குடிநீர் பணிகளின் அவசர அவசியம் கருதி, குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில், திரு T.சுகுமாரன் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கும் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2691/14/இ2

**தீர்மானம் எண்.1611 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.2

இந்நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்: 29,30–ன் இடையில் அலுவலக பணிகளுக்கு வசதியாக வாசல் அமைப்பதற்கும் மற்றும் கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்: 24,25–ன் இடையில் உள்ள சுவரினை, கடையினை விரிவாக்கம் செய்யும் பொருட்டு இடித்து அப்புறப்படுத்துவதற்கும் அனுமதி வழங்க கேட்டு சம்மந்தப்பட்ட வாடகைதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நேராய்வு மேற்கொள்ளப்பட்டு, கீழ்காணும் விவரப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வாடகைதாரர் பெயர் (ம) முகவரி | வணிக வளாகத்தின் பெயர் (ம) கடை எண் | செலுத்தப்படவேண்டிய மதிப்பீட்டு கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.A.நற்சீசன்<br>தக்கலை | கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம்<br>29,30 | 6700/– |
| 2 | திரு.M.பால்தாஸ்<br>களிமார் | கலைஞர் கருணாநிதி வணிக வளாகம்<br>24,25 | 19,200/– |

மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை செலுத்தி கடைகளில் வாசல் அமைத்தல் மற்றும் இடைசுவர் அகற்றுதல் பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1790/16/இ1

**தீர்மானம் எண்.1612 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில் 26.01.2017 அன்று நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சிக்காக புதிய மூவர்ணக்கொடி வாஙகியது, தோரணஙகள், மைக்செட் மற்றும் இதரச் செலவுத் தொகை ரூ. 2932/– வழஙக மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1829/2015/எச்1

**தீர்மானம் எண்.1613 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்தில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து, பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வினியோகம் செய்வதற்காக 2017–18–ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 5,00,000/–க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழஙகல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றத் தீர்மானம் எண்: 1602 நாள்: 31.01.2017–ன் மூலம் ஏற்கனவே மன்றம் அஙகீகரித்துள்ளது. அதன் அடிப்படையில் 17.02.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு. C. சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |
| 2 | திரு. S. வரதராசன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.26% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு. C. சந்திரசேகர் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.06% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙகுவதற்கு அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.123–1/2017/இ1

**தீர்மானம் எண்.1614 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சி குடிநீர் லாரி TN74Z 5304 - ன் தகுதி சான்றினை 2017–18–ம் ஆண்டிற்கு புதுப்பிப்பதற்காக, வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 34,000/– க்கும், மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்வதற்கும் இந்நகர் மன்ற தீர்மானம் எண்.1608 நாள்: 31.01.2017–ன் மூலம் அஙகீகரித்துள்ளது. அதன் அடிப்படையில் 17.02.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/S. Ganesh Motor Works, Vadasery, Nagercoil | மதிப்பீட்டை விட 0.60% குறைவு |
| 2 | M/S. K.S.S.S Automobiles, Nagercoil | மதிப்பீட்டை விட 1.35% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S. Ganesh Motor Works, Vadasery, Nagercoil நிறுவனம் மதிப்பீட்டை விட 0.60% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙகுவதற்கு அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5954/2010/இ1

**தீர்மானம் எண்.1615 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியினை சமாளிக்கும் பொருட்டு பழுதடைந்த மின் மோட்டார்களை மாற்றி 5– ஆழ்துளை கிணறுகளுக்கும் மின் மோட்டார்கள், Panel Board மற்றும் Cable Wire புதியதாக வாஙகிடவும் மேலும் பழுதடைந்த Slice Valve- களை மாற்றி விட்டு 4” Slice Valve-3 எண்ணம், 3” Slice Valve-4 எண்ணம் புதியதாக வாஙகிடவும் மேலும் 3 Panel Board-கள் புதியதாக வாஙகிடவும் மற்றும் 5” Air Valve-1 எண்ணம், 4” Air Valve-1 எண்ணம், 6” Air Valve-1 எண்ணம், புதியதாக வாஙகிட ரூ. 4,95,000–க்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.349/2017/இ2

**தீர்மானம் எண்.1616 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சியில் 21 ஆழ்துளை கிணறுகளில் மின்மோட்டார்கள் இறக்கப்பட்டு அதன்மூலம் தினசரி பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மின்தடை ஏற்படும் காலஙகளில் குடிநீர் சீரான முறையில் வழஙகிட 30KVA. 50 KVA. 62.5KVA மற்றும் 200KVA ஜெனரேட்டரில் பேட்டரி 2 எண்ணம் Battery –கள் வாஙகி பயன்படுத்திட ரூ.24,000/– உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.348/2017/இ2

**தீர்மானம் எண்.1617 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மினி ஆட்டோ எண். TN-75-P-8424-ல் உள்ள டயர்கள் 4 எண்ணம் சுமார் 37500 கி.மீ ஓடியுள்ள நிலையில் மிகவும் பழுதாகி உள்ளது. மேற்படி வாகனத்திற்கு புதிய டயர்கள் 4 எண்ணம் வாஙகிட ரூ.10800/– உத்தேச செலவினத்திற்கு மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1407/2014/எச்1

**தீர்மானம் எண்.1618 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினிலாறி எண் TN-74-T-5508 ற்கு தகுதி சான்று பெறுவதற்காக முன்பணமாக இந்நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.10000/– வழஙகப்பட்டது. மேலும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கட்டணம் செலுத்தவும், வேகக்கட்டுப்பாடு கருவி பொருத்தவும், புகை பரிசோதனை மற்றும் சேஸ் பிரிண்ட் எடுக்கவும், ரிப்ளைக்டர் ஸ்டிக்கர் ஒட்டவும் மொத்த செலவு ரூ.12775/– ஆகும். ஏற்கனவே வழஙகப்பட்ட முன்பணம் ரூ. 10000/– மற்றும் கூடுதல் செலவு தொகை ரூ.2775/– சேர்த்து தகுதி சான்று பெறுவதற்குரிய மொத்த தொகை ரூ.12775/– க்கு மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2913/2009/எச்1

**தீர்மானம் எண்.1619 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சி மாவட்ட உயர்மட்டக்குழு கூட்ட எண்.6–ற்கான தணிக்கை பத்தி பதில்கள் ஜெராக்ஸ் எடுத்து ஸ்பைரல் பைண்டிங செய்த வகையில் செலவு ரூ.890/– இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2869/2013/எச்1

**தீர்மானம் எண்.1620 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சியில் கட்டிட வரைபடம் அனுமதி கோரி வரும் விண்ணப்பஙகள் மற்றும் இதர விண்ணப்பஙகள் மீது கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்வதற்கு அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | இனம் | ஏற்கனவே உள்ள கட்டண விகிதம் (மூன்று வருடஙகளுக்கு) | தற்போது நிர்ணயம் செய்துள்ள கட்டண விகிதம் (மூன்று வருடஙகளுக்கு) |
|---|---|---|---|
| I | கட்டிட உரிமக்கட்டணம் | | |
| 1 | கட்டிடம் கட்டுதல் 100 சதுர அடி | ரூ.50/– | ரூ.200/– |
| 2 | கழிவறை ஒன்றிற்கு | ரூ.100/– | ரூ.200/– |
| 3 | கட்டிடம் கட்டும் இடம் மேற்பார்வை கட்டணம்<br>i) 2000 சதுர அடி வரை | | ரூ.200/– |
| | ii) 2000 முதல் 4000 சதுர அடிவரை | | ரூ.500/– |
| | iii) 4000 சதுர அடிக்கு மேல் | | ரூ.1000/– |
| 4 | செப்டிக் டேஙக் | ரூ.100 | ரூ.200 |
| 5 | கிணறு ஒன்றிற்கு | ரூ.100/– | ரூ.500/– |
| 6 | மதில் சுவர் | 10/IRM | ரூ.500/– |
| 7 | அபராதக் கட்டணம் | ரூ.300/– | ரூ.500/– |

| | | | |
|---|---|---|---|
| 8 | கட்டிடம் கட்டும் இடம் அங்கீகாரம்<br>i) ஏர் வரை<br>ii) ஏர் வரை | <br><br>ரூ.50/–<br>ரூ.100/– | <br><br>ஏர் ஒன்றிற்கு<br>ரூ.200/– |
| II | அபிவிருத்திக் கட்டணம் | | |
| 1 | கட்டிடம் கட்டுதல் கட்டிடம் – 1 சதுர மீட்டருக்கு (குடியிருப்பு (ம) வணிகம்) | குடியிருப்பு– 2.50<br><br>வணிகம் – 5.00 | குடியிருப்பு– 5.00<br><br>வணிகம் – 10.00 |
| 2 | கட்டிடம் கட்டும் மனை 1 சதுர மீட்டருக்கு (குடியிருப்பு மற்றும் வணிகம்) | குடியிருப்பு– 1.00<br><br>வணிகம் – 5.00 | குடியிருப்பு– 2.00<br><br>வணிகம் – 5.00 |
| III | | | |
| 1 | பிறப்பு/ இறப்பு சான்றிதழ் | சான்றிதழ் ஒன்றிற்கு ரூ.14 | சான்றிதழ் ஒன்றிற்கு ரூ.30/– |
| 2 | பிறப்பு/ இறப்பு பெயர் திருத்தம் | – | ஒவ்வொரு திருத்தத்திற்கும் ரூ.200/– |
| 3 | சுகாதார சான்று | ரூ.200/– | ரூ.1000/– |
| IV<br>1) | சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் புதிய வரிவிதிப்பு படிவம் | ரூ.1/– | ரூ.10/– |
| 2) | சொத்துவரி பெயர் மாற்றம் கட்டணம் | ரூ. 25/–(1 லட்சம் மதிப்பிற்கு) | ரூ. 100/–<br>(1 லட்சம் மதிப்பிற்கு) |
| 3) | சான்று வழஙகுதல் | ரூ.25/– | ரூ.100/– |

தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் கட்டணஙகள் நிர்ணயம் செய்யப்பட்டு 5 வருடஙகளுக்கு மேல் ஆகின்றது. நகராட்சியின் நிதி நிலைமையை மேம்படுத்தவும் பொது மக்களுக்கான பணிகளை தொய்வின்றி செய்யவும் புதிய கட்டணம் நிர்ணயம் செய்யவும் மேல் நடவடிக்கை தொடரவும் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண்.1621 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.12

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 21 ஆழ்துளை கிணறுகள் வாயிலாக தடையின்றி தினசரி 90 LPCD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் வினியோகத்திற்காக மின்வாரியத்திற்கு செலுத்திய வேண்டிய மின் கட்டணம் ஒவ்வொரு மாதமும் அதிகரித்து, வருடம் ஒன்றிற்கு சுமார் 75.00 லட்சம் மின்கட்டணமாக செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் குடிநீர் விநியோகம் வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்கு சுமார் 10.00 லட்சம் மற்றும் மின் தட்டுப்பாடு ஏற்படும் நேரஙகளில் ஜெனரேட்டர் வாயிலாக தடையின்றி குடிநீர் விநியோகம் செய்வதால், இதற்கான வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்கு சுமார் 5.00 லட்சமும் சேர்த்து ஆகமொத்தம் வருடம் ஒன்றிற்கு குடிநீர் வினியோகத்திற்கு

மட்டும் சுமார் 90.00 லட்சம் செலவு செய்யப்பட்டு வருகிறது.ஆனால் தற்போது இந்நகராட்சியிலிருந்து வழஙகப்பட்டுள்ள 4439 குடிநீர் குழாய் இணைப்புகள் வாயிலாக வருடத்திற்கு குடிநீர் கட்டணமாக ரூ.29.26 லட்சம் மட்டுமே வசூலிக்கப்பட்டு வருகிறது. இதனால் வருவாய்க்கு அதிகமான செலவினை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதோடு, இந்நகராட்சி கடுமையான நிதி நெருக்கடிக்குள்ளாகி உள்ளது. இதனை ஈடுசெய்யும் வகையில் குடிநீர் குழாய் இணைப்புகளுக்கான வைப்புத்தொகை மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை உயர்வு செய்வது மிகவும் அத்தியாவசியமாகவும், அவசியமானதுமாகிறது. எனவே, குடிநீர் உபவிதிகளின் அடிப்படையில் தற்போது உள்ள கட்டணஙகளை கீழ்காணும் விவரப்படி குடிநீர் குழாய் இணைப்பு வைப்பு தொகை மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை உயர்வு செய்வதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மை பொறியாளர் அவர்களின் அனுமதி பெற்று குடிநீர் விநியோக துணை விதியை திருத்தம் செய்யவும், அளவுமானி கட்டணத்தை மாற்றி ஒரே சீரான ( Flat rate) கட்டணமாக மாற்றம் செய்வதற்கும், விண்ணப்பக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினையும் மாற்றம் செய்வதற்கும் மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ.எண் | தற்போதுள்ள குடிநீர் கட்டணம் | திருத்தியமைக்கப்பட வேண்டிய குடிநீர் கட்டணம் |
|---|---|---|
| 1 | வீட்டு உபயோகத்திற்கான கட்டணம் 1000 லிட்டருக்கு ரூ. 5.00 வீதம் குறைந்தபட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ. 50/– | வீட்டு உபயோகத்திற்கான கட்டணம் 1000 லிட்டருக்கு ரூ.15.00 வீதம் குறைந்தபட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.150/– |
| 2 | வீடு உபயோகமில்லாத இதர உபயோகஙகளுக்கு 1000 லிட்டருக்கு கட்டணம் ரூ.12.00 வீதம் குறைந்தபட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.120/– | வீடு உபயோகமில்லாத இதர உபயோகஙகளுக்கு 1000 லிட்டருக்கு கட்டணம் ரூ.36.00 வீதம் குறைந்தபட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ. 360/– |
| 3 | வணிக நிறுவனஙகளுக்கு 1000 லிட்டருக்கு கட்டணம் ரூ.18.00 வீதம் குறைந்தபட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.180/– | வணிக நிறுவனஙகளுக்கு 1000 லிட்டருக்கு கட்டணம் ரூ.54 வீதம் குறைந்தபட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.540/– |

**விண்ணப்ப கட்டணம் மற்றும் வைப்புதொகை**

| விண்ணப்ப விபரம் | தற்போது நடைமுறையில் உள்ள கட்டணம் (ரூ) | திருத்தியமைக்கப்பட வேண்டிய கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1) விண்ணப்ப கட்டணம் | 25/– | 50/– |
| 2) வீட்டு இணைப்புக்கு | 2000/– | 5000/– |
| 3)வீட்டு உபயோகம் அல்லாத இணைப்புகளுக்கு | 5000/– | 10,000/– |
| 4) வணிக நிறுவன இணைப்புகளுக்கு | 7000/– | 15,000/– |

ந.க.எண்.இ2/7063/2011

**தீர்மானம் எண்.1622 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.13

இந்நகராட்சிக்குட்பட்ட பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பர படுத்துவதற்கு 2014-15-ம் ஆண்டில் குத்தகைக்கு எடுத்திருந்த தீசோன் மீடியா நிறுவனம் கடந்த 2014-15 முதல் 2015-16 வரை பேருந்து தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்து வந்த நிலையில் 2016-17 –ம் ஆண்டு முதல் மேற்படி நிறுவனம் செயல்படாத காரணத்தால் தொலைக்காட்சி விளம்பரம் நிறுத்தப்பட்டது. மேலும் 2016-17-ம் ஆண்டுடன் மேற்படி நிறுவனத்திற்கான குத்தகை காலம் முடிவடைந்து விட்டதால் 2017-18 ம் ஆண்டிற்கு மேற்படி இனத்திற்கான குத்தகைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஆனால் திரு.ஆர்.ஆர் எண்டர்பிறைசஸ் நிறுவனம் ரூ.78,800/-க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது.

மேற்படி இனத்திற்கு வேறு எவரும் ஏலம் கேட்கவோ, ஒப்பந்தப்புள்ளி அளிக்கவோ முன்வராத நிலையில் நகராட்சி நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு திரு.ஆர்.ஆர். எண்டர்பிறைசஸ் நிறுவனம் அளித்துள்ள ரூ.78,800/-க்கான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று 01.04.2017 முதல் 31.03.2018 வரையிலான ஓராண்டிற்கு மேற்படி இனத்திற்கு குத்தகை உரிமம் வழங்குவதற்கு மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.அ1/236/2017

**தீர்மானம் எண்.1623 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.14

<u>திடக்கழிவு மேலாணமை துணை விதிகள் 2016</u>

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)ல் பிரிவு 3,6 மற்றும் 25 களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்கைக்குட்பட்ட பகுதியில் நகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம்பிரித்தல், எடுத்து செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த நகராட்சி நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து கழிவுகளை கண்ட இடங்களில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம்பிரித்து நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<u>குளச்சல் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306 ன் கீழ் இயற்றப்பட்டது.</u>

குளச்சல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி தனிநபர் குடியிருப்பு, வணிக வளாகங்கள், உணவு விடுதிகள், சிற்றுண்டி சாலை, மருத்துவமனைகள், மொத்த வணிகர்கள், சில்லரை வணிகர்கள் மற்றும் அனைத்து வணிகர்கள் உட்பட அனைவரும் குளச்சல் நகராட்சியை தூய்மையான நகராட்சி பகுதியாக்க திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த உப்பளம் பகுதியில் அமைந்துள்ள நகராட்சி உரக்கிடங்கில் 4.00 ஏக்கர் பரப்பளவில் திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016ன்படி திடக்கழிவுகளை கையாளுதல் மற்றும் மேலாண்மை செய்தல் முறைப்படுத்தப்பட்டு உள்ளது. இதன்படி நகராட்சி திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016 ன் அட்டவணை 11 வரிசை எண்.1(3)ன்படி கழிவை உருவாக்குபவர் அதனை குப்பையாக வெளியே போடுவதை தவிர்க்கும் பொறுப்புடையவராவர் அவர் அதிகார அமைப்பினால் அறிவிக்கப்பட்ட சேகரித்தல் மற்றும் பிரித்தல் முறைக்கு இணங்கி கழிவை ஒப்படைப்பு செய்ய உறுதி செய்ய வேண்டியவராவார்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் VIII பிரிவு 153, 156, 157, 158, 160 மற்றும் 161ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய ஏற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொது சுகாதாரம் பேணி சுற்றுச்சுழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து பணம் வசூலித்து செயல்படுத்தவும் நச்சுத் தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய கழிவுகளையோ, மலக்கழிவுகளையோ, மருத்துவக்கழிவுகளையோ மாற்றம் செய்தல், சாலைகளில் போடுதல் மற்றும் வடிகால்வாய்களில் கொட்டுதல் ஆகியவை தடை செய்யப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், வடிகால்வாய் தங்கு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி நகர்மன்றம் ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கு தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழங்கப்படுகிறது.

1. குளச்சல் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகள், தெருக்கள், சந்துக்கள், கடைவீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், உணவகங்கள், அலுவலகங்கள், வணிகவளாகங்கள் மற்றும் இதர பிற இடங்களில் வசிக்கும் மக்கள் திடக்கழிவுகளை தெருக்களிலோ, சாலை ஓரங்களிலோ, சந்துக்களிலோ, கழிவு நீர்க்கால்வாய்களிலோ, பொது இடங்களிலோ மற்றும் நீர்நிலைகளிலோ போடக்கூடாது என்று தடைவிதிக்கப்படுகிறது.
2. மக்கள் வசிக்கும் மற்றும் கூடும் இடங்களில் உருவாகும் குப்பைகளை மக்கும் தன்மை உள்ளவற்றினை தனியாகவும் மக்காத தன்மை உள்ளவற்றினை தனியாகவும் சேகரம் செய்யப்பட வேண்டும். மக்கும் தன்மையுள்ள குப்பைகளை பச்சை நிறக் கூடையிலும், மக்காத தன்மையுள்ள குப்பைகளை சிவப்பு நிறமுள்ள கூடையிலும் சேகரம் செய்யப்பட்ட வேண்டும். இது வீடு அல்லது

நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். கூடைகள் சொந்த செலவில் வாங்கி உபயோகிக்கப்பட வேண்டும்.

3. இவ்வாறு தரம் பிரித்து சேகரம் செய்யப்பட்ட குப்பைகளை நகராட்சி வாகனம் ஒவ்வொரு வீட்டிற்கும் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும், தனித்தனியாக பிரிக்கப்பட்ட இந்த குப்பைகளை நகராட்சி வாகனத்தின் பொறுப்பாளரிடம் நேரில் ஒப்படைப்பது வீட்டின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். பிரிக்கப்படாத குப்பைகளை கண்டிப்பாக வாங்கப்பட மாட்டாது.

4. அடுக்குமாடி குடியிருப்புகள், தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் இதர ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள பகுதியில் உள்ள வீடுகளது அல்லது நிறுவனங்களது உரிமையாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் நகராட்சியின் வாகனம் வரும்போது அவை நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். நகராட்சி பணியாளர்களால் மாடி ஏறி வந்து குப்பை பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. மீன், கோழி, ஆடு போன்ற இறைச்சி கடை நடத்துபவர்கள் கழிவுகளை தெருக்களிலோ அல்லது திறந்த வெளியிடங்களிலோ அல்லது கழிவு நீர்க் கால்வாய்களிலோ போடக்கூடாது. அவைகளை கசிவு ஏற்படாத வகையில் பொட்டலங்களாக்கி நகராட்சியின் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக்கூடாது.

6. மருத்துவமனை கழிவுகள், நோய் கிருமி சோதனை செய்யும் கூடங்கள் மற்றும் கால்நடை மருத்துவ கழிவுகளை எக்காரணம் கொண்டும், குப்பைகளில் சேர்க்க கூடாது. உயிரி மருத்துவ கழிவு மேலாண்மை விதிகள் 2016ல் கூறியுள்ளவாறு மருத்துவமனைகள் மற்றும் சோதனைச் சாலைகள் தங்களது சொந்த பொறுப்பில் உரிய முறையில் அகற்றி அழித்தல் வேண்டும். உயிரி மருத்துவ கழிவுகளை நகராட்சி பகுதியில் கொட்டுதல், புதைத்தல் மற்றும் எரித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.

7. தோட்டக்கழிவுகள், பால்பண்ணை கழிவுகள் ஆகியவற்றை உருவாக்குவோர் உரிமையாளர் அவற்றை தம் சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்த வேண்டும். நகராட்சி சாலை ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

8. கட்டிட இடிபாடுகளை கட்டிட உரிமையாளர் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் சாலைகளிலோ, தெருக்களிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அவைகளை சம்பந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய பயன்படுத்துவோர் கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவற்றை அப்புறப்படுத்தும்.

9. நகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக், ரப்பர், டயர் உள்ளிட்ட திடக்கழிவுகள் எவற்றையும் எரிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

10. திருமண மண்டபங்கள், கோவில், சர்ச், மசூதிகள், சத்திரம் ஆகியவற்றில் நடைபெறும் திருமணம் மற்றும் இதர விசேஷங்களின் போது உருவாகும் கழிவுகளை தெருக்களிலோ, சாலைகளிலோ, கழிவு நீர்

வாய்க்கால்களிலோ அல்லது வேறு எந்த பகுதிகளிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இவற்றை தமது சொந்த பொறுப்பில் வாகனம் மூலம் நகராட்சி உரக்கிடங்கில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக கட்டணம் செலுத்த வேண்டும்.

11. உணவு விடுதிகள்,தேநீர் விடுதிகள், தள்ளுவண்டியிலுள்ள உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள், இரவு நேரக்கடைகள்,காய்கறி மொத்த விற்பனை நிலையம், மார்க்கெட் ஆகியவற்றில் உருவாகும் குப்பைகளை தெருக்களிலோ சாலைகளிலோ,அல்லது நகராட்சியின் எந்த ஒரு பகுதியிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். உரிய பயன்படுத்துவோர் கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே இவற்றினை பெற்றுக் கொள்ளும்.

12.அச்சகங்கள்,தொழிற்சாலைகள் ரசாயன மருந்து கையாளும் தொழிற்சாலை மற்றும் இதில் குறிப்பிடாத இதர அனைத்து வணிக மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் குப்பை கழிவுகளை நகராட்சி எல்லைக்குள் கொட்டக்கூடாது.

13.தோல்பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளை நகராட்சி பகுதியில் விடக்கூடாது.கழிவுகளை அப்புறப்படுத்த மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வகுத்துள்ள விதிமுறைகளின் படி அப்புறப்படுத்த வேண்டும்.

14.பாதசாரிகள் மற்றும் சாலை ஓரங்களிலும் இதர இடங்களிலும் குடியிருப்போர் நகராட்சி சாலை ஓரங்களில் மற்றும் திறந்தவெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தல் கூடாது.

15.செப்டிக் டேங்க் கழிவுகளை கழிவுநீர் வாய்க்கால்களிலோ,அல்லது தெருக்களிலோ கொட்டக்கூடாது. அவ்வாறு கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

16.நகராட்சியின் வாகனம் மூலம் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த பயன்படுத்துவோர் கட்டணங்கள் பின்வருமாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வ.எண். | பொருள் | காலம் | கட்டணம் ரூபாய் |
|---|---|---|---|
| | 1.குடியிருப்பு | | |
| அ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.500க்குள்) | மாதம் ஒன்றிற்கு | 20.00 |
| ஆ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.501–1000க்குள்) | மாதம் ஒன்றிற்கு | 30.00 |
| இ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.1001–2000க்குள்) | மாதம் ஒன்றிற்கு | 50.00 |
| ஈ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.2001க்கு மேல்) | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| | 2.நிறுவனம் | | |
| அ. | தனியார் பள்ளி,கல்லூரி விடுதி தனியார் அலுவலக வளாகம் | மாதம் ஒன்றிற்கு | 500.00 |
| ஆ. | மருத்துவமனை (படுக்கையுடன்) | மாதம் ஒன்றிற்கு | 500.00 |
| இ. | கிளினிக் | மாதம் ஒன்றிற்கு | 300.00 |
| | 3.வணிகம் | | |
| அ. | டீ ஸ்டால்/சிற்றுண்டி | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| ஆ. | நடமாடும் உணவகம் | தினமும் | 10.00 |
| இ. | உணவகம் சிறியது | மாதம் ஒன்றிற்கு | 500.00 |

| | | | |
|---|---|---|---|
| ஈ. | உணவகம் பெரியது | மாதம் ஒன்றிற்கு | 1000.00 |
| உ. | வணிக வளாகம் | மாதம் ஒன்றிற்கு | 1000.00 |
| ஊ. | திருமண மண்டபம் சிறியது | நிகழ்வு ஒன்றுக்கு | 500.00 |
| எ. | திருமண மண்டபம் பெரியது | நிகழ்வு ஒன்றுக்கு | 1000.00 |
| ஏ. | தையல் கடை | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| ஐ. | இருசக்கர வாகன பழுது நீக்கும் கடை | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| ஒ. | மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் கடை | மாதம் ஒன்றிற்கு | 200.00 |
| ஓ. | தேங்காய்/பூ/பழம்/காய்கறிகள் வியாபாரம் | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| ஔ | பலசரக்கு/ஸ்டேஷனரி/மருந்தகம் | மாதம் ஒன்றிற்கு | 300.00 |
| **4.மற்றவை** | | | |
| அ. | மட்டன்/சிக்கன்/மீன் ஸ்டால் | மாதம் ஒன்றிற்கு | 300.00 |
| ஆ. | சினிமா தியேட்டர் | மாதம் ஒன்றிற்கு | 1000.00 |
| இ. | ஜவுளி கடை வியாபாரம் | மாதம் ஒன்றிற்கு | 500.00 |
| ஈ. | தோல் பை விற்பனை, தயார் செய்தல்,காலணி விற்பனை | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| உ. | மரக்கழிவுகள் | ஒரு லாரி அளவுக்கு | 1000.00 |
| ஊ. | தோட்டக்கழிவுகள் | ஒரு லாரி அளவுக்கு | 1000.00 |
| எ. | வீட்டுத் தோட்டக்கழிவுகள் | ஒரு லாரி அளவுக்கு | 1000.00 |

17.மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு 1920 நகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1999 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம் பிரிவு 15–ன் படி குளச்சல் நகராட்சியின் சுற்றுச் சூழலுக்கு எதிரானதாக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.

18.துணை விதிகளின் குறிப்பிட்டுள்ள செய்யக்கூடாத செயலை செய்யும் நபருக்கு தண்டனையாக ரூ.1000 அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

19.தொடர் குற்றங்களுக்கு கூடுதலாக தினசரி ரூ.100–வீதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

20.மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, நகராட்சியின் ஆணையாளருக்கு நகர்மன்றத்தால் அதிகாரம் வழங்கப்படுகிறது.

இச்செயல்பாடுகள் அனைத்தும் 01.05.2017 முதல் அமுல்படுத்தும் வகையில், நாளிதழில் பிரசுரம் செய்து 01.04.2017 க்குள் பொது மக்களிடமிருந்து எழுத்து பூர்வமாக வரப்பெறும் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளின் மீது இறுதி முடிவு எடுக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் வழங்கவும், தொடர் நடவடிக்கையாக மாவட்ட அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டு நடவடிக்கை மேற்கொள்ளவும் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண்.1624 அங்கீகரிக்கப்பட்டது.**

## பொருள் எண்.15

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் சீமை கருவேல மரங்களை உடனடியாக அகற்றும் பொருட்டு, நகராட்சி புறம்போக்கு பகுதியில் உள்ள மரங்களை நகராட்சி பொது நிதியிலும், பட்டா நிலத்தில் உள்ள மரங்களை பட்டாதாரர் தனது சொந்த செலவில் அகற்றுவதற்கும் நடவடிககை மேற்கொள்ளவும், கல்குளம் வட்டாட்சியர் கடிதம் எண்.ஆ2/50/2017 நாள் 23.01.2017-ல் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில், இந்நகராட்சி புறம்போக்கு பகுதியில் காணப்பட்ட சீமை கருவேல மரங்களை அகற்றுவதற்கு பணியின் அவசர அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருதி, உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டு, நகராட்சி பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொண்டதற்கும், அதற்கான செலவினம் ரூ.9750/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண்.1625 அஙகீகரிக்கப்பட்டது.**

தனி அலுவலர்
குளச்சல் நகராட்சி